EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

**விசேஷ அப்ரெண்டிஸ்ஷிப் பயிற்சித்திட்டம்**

**என்ன திட்டங்களும் சேவைகளும் கிடைக்கப்பெறுகின்றன?**

<u>அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டம்:</u>

வேலை தேடுவோர்களின் அறிவிற்கும் அனுபவத்திற்கும் வேலை வழங்குபவர்களுக்குத் தேவைப்படும் திறமைகளுக்கும் நடுவே உள்ள இடைவெளியை நிரப்பவே அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டம் (Pre-Apprenticeship Training Program) வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்ரெண்டிஸ்ஷிப் தொகுதிக்குள் பிரவேசிக்க விரும்புபவர்கள், அப்ரெண்டிஸாக (உத்தியோகம் பழகுபவராக) வேலை எடுப்பதற்கு தேவையான வேலைத் திறமைகளையும் தொழிற்கலைத் துறை தயார் நிலையையும் அபிவிருத்தி செய்ய இந்தத்திட்டம் உதவும்.

இந்தத்திட்டம் 40 வாரங்கள் வரையிலான காலப் பகுதியை கொண்டது. இது தரம் 1 பாடசாலையில் அமையும் அப்ரெண்டிஸ்ஷிப் பயிற்சி, சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சி மற்றும் குறைந்தபட்சம் 8 வார வேலையில் அமர்த்துதலையும் (work placement) உள்ளடக்கும்.
இந்தத்திட்டங்கள் தொழிற்கலைத் துறை தயார் நிலை, வேலைக்குத் தயாராதல் மற்றும் அறிவை உயர்த்துதல் (அக்காடமிக் அப்கிரேடிங்) ஆகியவற்றை உள்ளடக்கக்கூடும்.

அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டத்தில் சேர்ந்துகொள்ள கட்டணம் எதுவுமில்லை. அத்தோடு பாடப்புத்தகங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கருவிகள் ஆகியவற்றிற்கான செலவு, திட்டத்தில் உள்ளடங்குகிறது.

**யார் பங்குகொள்ள முடியும்?**

அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டம்  கீழ்க்கண்டவர்கள் உட்பட இன்னும் பல்வகையானோருக்கு கிடைக்கப்பெறுகிறது:

- ஹைஸ்கூல் பட்டதாரிகள்

- பாடசாலைப் படிப்பை முடிக்காதவர்கள்
- வேலையற்ற/தகுதிக்குக் குறைந்த வேலைசெய்யும் இளைஞர்களும் பெரியவர்களும்.
- வேலைக் காப்புறுதியுடைய/ வேலைக் காப்புறுதியற்ற (EI/Non-EI Eligible)
- சுதேசிகள்
- கனடாவிற்கு புதிதாக வந்திருப்பவர்கள்

குறிப்பு: குறிப்பிட்ட திட்டங்களுக்கு சில தகுதித் தராதரங்களை (eligibility criteria) ஒருவர் அடைய வேண்டும்.

**அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டத்தை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

வருடத்தின் பல்வேறு காலப் பகுதிகளிலும், கல்லூரிகள், அங்கீகரிக்கப்பட்ட அப்ரெண்டிஸ்ஷிப் வழங்குபவர்கள், கம்யூனிடி ஏஜன்சிகள் போன்ற வேறுபட்ட அமைப்புகள் மூலம் அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டம் வழங்கப்படுகிறது. அப்ரெண்டிஸ்ஷிப்புக்கு முந்திய பயிற்சித்திட்டத்தில் பங்குகொள்ள ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி வழங்கும் அமைப்புக்களுடன் நேரடியாக தொடர்புகொள்ளலாம். உள்ளூரில் வழங்கப்படும் திட்டங்கள் பற்றி அறிந்துகொள்ள அமைச்சுடன் தொடர்புகொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X